தேதி.25.11.2024

## சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

**O.S.No**. 89/2016 **திருமதி.லட்சுமி** **வா.சா. 1**

**வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

27.08.1996ம் தேதியிட்ட உயிலை முக்கியமாக வைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலை எழுதி ராஜம்மாள் 05.06.2006ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்து பத்து ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து கொடுப்பதாக சொல்லி விட்டு பிரதிவாதிகள் கொடுக்கவில்லை. எனது கணவர் எந்த ஆவணங்களையும் கொடுக்கவில்லை. ஆவணங்களை எடுப்பதற்கு இவ்வளவு காலம் ஆகிவிட்டது. உயிலில் கண்டுள்ளவிவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் உயிலை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். உயில் வாசகங்களின் படி ராஜம்மாளின் மகன் **ஸ்ரீ**தர் கலப்புத்திருமணம் செய்துள்ளதால் சொத்தில் பாகம் வேண்டாம் என எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேலும் உயில் வாசகங்களின் படி ராஜம்மாளின் மகன் துரைசாமி கலப்புத்திருமணம் செய்துள்ளதால் சொத்தில் பாகம் வேண்டாம் என எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். உயில் வாசகங்களின் படி எனது கணவர் சுகுமாருக்கு ராஜம்மாளின் காலத்திற்கு பின்னிட்டு ரூ.1,00,000/-ம் ரூபாய் ரொக்கம் மட்டும் கிடைக்கும்படி கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது எங்களை ஏமாற்றி எழுதப்பட்டது. உயிலில் ஏ செட்டியூல் சொத்து அமுதவேணிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி செட்டியூல் சொத்து பிரதிவாதி

ஜவஹருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் கடைசி காலம் வரை என்னுடன் தான் இருந்தாரா அல்லது பிரிந்து சென்று விட்டாரா என்றால் என்னுடன் தான் இருந்தார். எனது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் உயிலில் கண்டுள்ள படி ஒரு லட்ச ரூபாய் பெற்றுக்கொண்டுவிட்டார் என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் உயில் ராஜம்மாளின் ஜோதியிடம் இருந்தது என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆன உயிலில் பரமசிவம் மகன் பி.ராஜா என்பவரும், ராமசாமி மகன் ஆர். மணி என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனது கணவர் 19.02.2001ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 2016ல் எனது கணவர் இறந்து 15 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் இறந்தவுடனே சொத்து வேண்டுமென்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் எப்போது பாகம் கேட்டேன் என்றால் எனது கணவர் இறந்து ஒரு வாரத்தில் கேட்டேன். ராஜம்மாள் இருக்கும்போதே கேட்டேன். எனது வீட்டுக்காரர் இறந்தவுடன் ராஜம்மாள் உயிருடன் இருக்கும்போதே பாகம் கேட்டதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சொல்லியுள்ள ராஜம்மாள் உயிருடன் இருக்கும்போது சத்தி கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் வங்கியிருப்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உயிலை நான் எப்பொழுது நகல் எடுத்துப் பார்த்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மறந்துவிட்டேன். ராஜம்மாள் 05.06.2006ல் இறந்தவுடன் அந்த உயில் அமலுக்கு வந்துவிட்டது என்றால் எங்களை ஏமாற்றி வாங்கி கொண்டார்கள். உயில் அமலுக்கு வந்த பிறகு 14.01.2008ல் 4ம் பிரதிவாதி ஜவஹர், 7ம் பிரதிவாதி வெங்கடேஷ்வரிக்கு உயில் படி செட்டில்மெண்டில் செய்து வைத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு பிறகு 25.11.2008ல் ஜவஹர், வெங்கடேஸ்வரி, அமுதவேணி (6,7பிரதிவாதிகள்) அவர்களுக்குள் பாகப்பிரிவினை பத்திரம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். நான்

அதை தடுப்பதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் ஒருத்தியாக இருந்ததால் ஆட்சேபனை செய்ய ஆள் இல்லை. பிரதிவாதிகள் அவர்களுக்குள் உரிமை மாற்றம் செய்ததற்கு பிறகு நான் 23.09.2010ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு 11.10.2010ல் பிரதிவாதி ஜவஹர் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு பின் வழக்கு தாக்கல் செய்யாமல் 2016ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தகவல் கொடுப்பதற்கு ஆள் இல்லை. வேறு சொத்து சம்பந்தமாக ஜோதி 2007ல் ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பின்னிட்டு EP 41/2008ஐ ஜோதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 2008 வழக்கில் எனது கணவர் ஆஜராகியிருந்தார் என்று நான் சொல்லியிருப்பது பொய் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. சமரசமாக பேசிக்கொள்ள நான் முயற்சி மேற்கொள்ளவில்லை என்றால் என்னிடம் யாரும் அவ்வாறு பேசவில்லை. சமரச பேச்சு வார்த்தை எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். ராஜம்மாள் உயிருடன் இருக்கும்போது ராஜம்மாள், சாமியப்ப முதலியார், ஜவஹர் ஆகியோர்கள் ஒன்றாக குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். 14.01.2008ல் செட்டில்மெண்ட் பிறகு வெங்கடேஷ்வரி அந்த சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கு பிறகு ஜவஹர் அவருக்கு வந்த சொத்தை அவரது மகனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை ஜவஹர் வங்கியில் காண்பித்து கடன் பெற்றுள்ளார் என்றால் ஜவஹர் ஒரு ஏக்கரை விற்பனை செய்து கடனை அடைத்துவிட்டார். ஜவஹர் 27.08.2011ம் தேதியில் வழக்கு சொத்தினை அடமானம் வைத்து பயிர் கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ஜவஹர் சத்தியமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. உயிலின் அடிப்படையில் ஜவஹர், வெங்டேஷ்வரி, அமுதவேணி ஆகியோர்கள் வருவாய் துறையில் வரிவிதிப்பு தாக்கல் செய்து வரி செலுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். 22.08.2015ல் வழக்கு சொத்திற்கும் வீட்டிற்கும்

மனைவாரி தோராய பட்டா பிரதிவாதிகள் பெயரில் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். ஜவஹர் பிரதிவாதி வழக்கு சொத்திற்கு 23.01.2021 தேதியில் பட்டா மாறுதல் உத்திரவு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்திரவில் ஜவஹர், வெங்கடேஷ்வரி மகன் செந்தில் ராஜ், அமுதவேணி, ஜவஹர் மகன் தீபக்குமார் இவர்கள் பெயரில் பட்டா வந்துகொண்டிருக்கிறது என்றால் சரிதான். நகராட்சியில் டவுன் சர்வே பெயரிலும் இவர்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜவஹரின் மகன் பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அவரது பெயரில் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் சொத்தினை பொருத்து கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 16.08.1996ல் துரைசாமி, சுகுமார், ஜோதி, கிருஷ்ணவேணி, வெங்கடேஷ்வரி ஆகியோர்கள் சொத்தில் பாகம் வேண்டாம் என்று சாட்சிகள் முன்னிலையில் ஒப்பந்த பத்திரம் எழுதியுள்ளார்கள் என்றால் இல்லை. ஜவஹர் வெங்கடேஷ்வரிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்ததக்கதல்ல என்று நான் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உயில்படி அமலுக்கு வந்து அதன் படி நடந்து வருவதால் நான் உயில் படி பாகம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் வாரிசுகளிடம் தான் சொத்துக்கள் சுவாதீனத்தில் உள்ளது என்றால் நாங்களும் வாரிசு தான். எங்களுக்கும் சொத்து இருக்கிறது. 2016ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு பிறகு அவர்களுக்குள் உரிமை மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அவர்களையும் வழக்கில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உரிமை மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடம் தான் ஆகிறது. உயில் செல்லாது எங்களை கட்டுப்படுத்தாது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். உயிலை ரத்து செய்வதற்கும், உயில் செல்லாது என்பதற்கும் பரிகாரம் கேட்கவில்லை என்பதால் நான் பாகப்பிரிவினை கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் காலக்கெடு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், காலவரையறை சட்டத்தினால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

நான் கேட்டுள்ளபடி பரிகாரம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.